Registered as a News Paper in Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஞூ ஆனி மீ 25 ஆம் உ    திங்கட்கிழமை    (09 - 07 - 1990)    ஹிஜ்ரி 1410    ஜுல்ஹஜ் 15    ஓசை 141

## மட்டக்களப்பு மாவட்டம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் என்பது பொய்!

### நேரில் சென்ற எ. எவ். பி. நிருபர் கூறுகிறார்

(மணிலா)

ஸ்ரீலங்கா அரசு கூறுவதுபோன்று மட்டக்களப்பு மாவட்டம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லை. அது பொய்யென மட்டக்களப்பிற்கு நேரடியாகச் சென்ற எ எவ். பி. செய்தி நிருபர் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

எ. எவ். பி. செய்தி நிருபர் தான் அங்கு சென்றபோது மட்டக்களப்பு நகரைத்தவிர சூழவுள்ள ஏனைய பகுதிகள்யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

நகரில் இருந்து அரைமைலுக்கு அப்பால் (4 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறையில்

# கடற்படைக் கப்பல் மீது புலிகள் தாக்குதல்!

## சேதமடைந்த கப்பல் உணவு, ஆயுதங்களுடன் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள ஸ்ரீலங்காப்படையினருக்கு உணவுப் பொருட்களையும் ஆயுதங்களையும் வழங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தினார்கள். இதனால் படையினருக்கு உணவையும், ஆயுதங்களையும் வழங்கும் முயற்சி தோல்வியடைந்தது.

நேற்று முன் தினம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருட்களையும், ஆயுதங்களையும் ஏற்றிக் கொண்டு வந்த ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் சப்பல் சேதமடைந்தது. இதனால் சப்பல்துறைமுகத்துக்கு வந்து தரித்து நிற்காமலே திரும்பிச் சென்றது.

கப்பல் காங்கேசன்துறையிலிருந்து திரும்பிச்சென்றதும் கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று கடலிலிருந்து கரையோரப் பகுதிகளிலிருந்த குடிமனைகளை நோக்கிச் சரமாரியாகப் பீரங்கித் தாக்குதலை நடத்தியது. இப்பகுதி மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து சென்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அருகில் நின்ற கடற்படைக் கப்பல் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடாத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## பதுக்கி வைத்த 30 சீனி மூடைகள் பிடிபட்டன

(விசேட நிருபர்)

கடந்த சனிக்கிழமை காலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தேடுதல் வேட்டையில் முப்பது சீனி மூடைகள் கைப்பற்றப்பட்டன.

கொக்குவில் சந்தியில் (காங்கேசன்துறைவீதி) குறிப்பிட்ட கடையில் இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து மேற்கொண்ட நடவடிக்கையில் முப்பது சீனி மூடைகள் மீட்கப்பட்டதாக அறியப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பிரச்சினை

## அகதிகள் திரும்புகின்றனராம்

(கொழும்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பலஇடங்கள் சகஜ நிலைக்கு வந்துள்ளதாகவும் பெரும்பாலான அகதிகள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்புகின்றனர் என்றும் அரசாங்கம் அறிவித்தது.

விரைவில் இங்கு சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் எரிபொருள், உணவுப்பொருள், மருந்து என்பனவற்றிற்குத் தட்டுப்பாடு நிலவவில்லை என்றும் அரசு அறிவித்தது.

## வீடு உடைத்து திருட்டு

(விசேட நிருபர்)

யாழ்-ஐந்தாம் குறுக்கு வீதி திஸவீரசிங்கி என்பவரது வீடு உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த வீட்டுத் தளபாடங்கள் திருடப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சங்கக்கடை மூலம் தர்மப்பணம்

(கிளிநொச்சி)

அரச உதவிச் சம்பளம் பெறும் வறியகுடும்பங்களுக்கு தர்மப்பணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஜூன் மாதத்திற்குரிய பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி அர

# மூதூரில் புலிகள் - ராணுவம் கடும் மோதல்

(மூதூர்)

திருமலை மாவட்டத்தில் மூதூர், கட்டைப்பறிச்சான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் மூதூரை அண்டிய அனைத்து கிராமங்களிலும் விமானப்படை விமானங்கள் அகோர குண்டு வீச்சு நடத்தி வருவதாகவும் கடற்படை கப்பல்கள் கரையோரப்பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொண்டு வருவதாகவும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வெளியேறும் அகதிகள் மீது படையினர் தாக்குதல்

விமானத் தாக்குதல்களாலும் கடற்படைப் பீரங்கித் தாக்குதலினாலும் மூதூர் கட்டை பறிச்சான், சேனையூர், பள்ளிக்குடியிருப்பு, பட்டித்திடல் ஆகிய இடங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள்வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

மேலும் கட்டை பறிச்சான், தோப்பூர் போன்ற இடங்களில் இருந்து வெளியேறி காடுகளில் தஞ்சமடைந்த மக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மண்ணையும் மக்களையும் காக்க உங்கள் உதவி தேவை

\- யோகி

(கொக்குவில்)

இன்று சிங்கள தேசம் தமிழ் தேசத்திற்கு எதிராக இன அழிப்பு யுத்தமொன்றைத் தொடுத்துள்ளது. எமக்கு எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள இவ் வேளையில் தமிழீழ மக்கள் அனைவரது பங்களிப்பையும் நாம் எதிர் பார்க்கிறோம் என நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழீழ மீட்பு நிதிக் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பெரும் தொகைப் பணம்தேவைப்படுகின்றதென்றும்ஆகவே தமிழ்மக்கள் அனைவரும் தங்கமாகவோ, பணமாகவோ, உளரீதியாகவோ, உடல் ரீதியாகவோ தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டியுள்ளது. இதன் மூலமே களத்தில் நிற்கும் போராளிகளுடன் ஒன்றிணைந்து எமது மண்ணை மீட்க முடியும் என்றார்.

இக் கூட்டத்திற்கு சிற்றா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழ் நாட்டில் புதிய முகாம்கள்

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு இனி வரவிருக்கும் அகதிகளைத் தங்கவைக்க புதிய முகாம்கள் திறக்கப்படவுள்ளன.

இவர்களுக்காக சேலம்; மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர், சிதம்பரனார் மாவட்டங்களில் அமைக்கப்படும் முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் தங்கவைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மண்டபம், கொட்டபட்டி போன்ற அகதிமுகாம்கள் நிரம்பிவிட்டதால் அகதி

(4ஆம் பக்கம் பார்க்க)

நேற்று முன் தினம் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு உணவுப் பொருட்களையும், ஆயுதங்களையும் ஏற்றிக் கொண்டு வந்த ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்மீது கடற்புலிகள் நடத்திய தாக்குதலில் சப்பல் சேதமடைந்தது. இதனால் சப்பல்துறைமுகத்துக்கு வந்து தரித்து நிற்காமலே திரும்பிச் சென்றது.

கப்பல் காங்கேசன்துறையிலிருந்து திரும்பிச்சென்றதும் கடற்படைப் பீரங்கிப் படகு ஒன்று கடலிலிருந்து கரையோரப் பகுதிகளிலிருந்த குடிமனைகளை நோக்கிச் சரமாரியாகப் பீரங்கித் தாக்குதலை நடத்தியது. இப்பகுதி மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து சென்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அருகில் நின்ற கடற்படைக் கப்பல் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடாத்தியதாகப் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## பதுக்கி வைத்த 30 சீனி மூடைகள் பிடிபட்டன

(விசேட நிருபர்)

கடந்த சனிக்கிழமை காலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் தேடுதல் வேட்டையில் முப்பது சீனி மூடைகள் கைப்பற்றப்பட்டன.

கொக்குவில் சந்தியில் (காங்கேசன்துறைவீதி) குறிப்பிட்ட கடையில் இருப்பதாக இரகசியத் தகவல் கிடைத்ததை அடுத்து மேற்கொண்ட நடவடிக்கையில் முப்பது சீனி மூடைகள் மீட்கப்பட்டதாக அறியப்படுகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த வீட்டுத் தளபாடங்கள் திருடப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சங்கக்கடை மூலம் தர்மப்பணம்

(கிளிநொச்சி)

அரச உதவிச் சம்பளம் பெறும் வறியகுடும்பங்களுக்கு தர்மப்பணம் பல நோக்குகூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஜுன் மாதத்திற்குரிய பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு க.மாணிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தீவுப் பகுதிக்கு மருந்து

(வேலணை)

தீவுப்பகுதி மக்களின்மருந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஓரளவு மருந்து வகைகளை வழங்கியுள்ளது.

## திருடர் பிடிபட்டனர்

(விசேட நிருபர்)

கையும், மெய்யுமாகப்பிடிபட்ட இரு திருடர்கள் நேற்றுக் (8-7-90) காலை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

குருநகர், புதிய கடற்கரை வீதி தர்மன் என்பவரது வீட்டில் திருட்டில் ஈடுபட்டிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

தேசத்திற்கு எதிராக இன அழிப்பு யுத்தமொன்றைத் தொடுத்துள்ளது. எமக்கு எமது மண்ணையும், மக்களையும் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள இவ் வேளையில் தமிழீழ மக்கள் அனைவரது பங்களிப்பையும் நாம் எதிர்பார்க்கிறோம் என நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தமிழீழ மீட்பு நிதிக் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் ... றும்ஆகவேதமிழ்மக்கள்அனைவரும் தங்கமாகவோ, பணமாகவோ, உள ரீதியாகவோ, உடல் ரீதியாகவோ தங்கள் ... மீட்க முடியும் என்றார்.

இக் கூட்டத்திற்கு சிற்றா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தமிழ் நாட்டில் புதிய முகாம்கள்

(சென்னை)

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு இனி வரவிருக்கும் அகதிகளைத் தங்க வைக்க புதிய முகாம்கள் திறக்கப்படவுள்ளன.

இவர்களுக்காக சேலம்; மதுரை, கோயமுத்தூர், தஞ்சாவூர், சிதம்பரனார் மாவட்டங்களில் அமைக்கப்படும் முகாம்களில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் தங்கவைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மண்டபம், கொட்டபட்டி போன்ற அகதிமுகாம்கள் நிரம்பிவிட்டதால் அகதி

(4ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைத் தமிழர் பிரச்சினை

# மத்திய மாநில அரசுகளை ஜெயலலிதா கண்டிக்கிறார்

(சென்னை)

1987 ஜுலை மாதம் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும், ஜே. ஆரும் செய்து கொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்ற மத்திய அரசு தவறிவிட்டது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையை அவசர அவசரமாக மத்திய அரசு விலகிக் கொண்டதால் அங்கு திரும்பிய தமிழ் அகதிகள் மீண்டும் தமிழ் நாட்டுக்கே வந்துவிட்டனர் என்றும் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழகம் அமைதிப்பகுதியாக இருக்கும்போது விடுதலைப்புலிகள் உட்பட தமிழ்ப் போராளிகளின் ஆயுத கலாசாரத்தை மாநில அரசும், மத்திய அரசும் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தாதது குறித்து மாநில அரசின் போக்கையும் அவர் கண்டித்துள்ளார்.

## கலவரத்தை அடக்க பொலிசார் உஷார்நிலையில்

(புதுடில்லி)

வடக்கு கிழக்கு நிலமைகளால் நாட்டின் ஏனைய பகுதிகளில் கலவரங்கள் வன்முறைகளைத் தடுக்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

கலகக்காரரை கண்டவுடன் சுடும் உத்தரவு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# சிங்களக் கொலைப்படை மட்டக்களப்பில் அட்டூழியம்!

### தமிழ்நாடு தினமணி திடுக்கிடும் தகவல்

(சென்னை)

மட்டக்களப்பில் சிங்களக் கொலைப்படையான புரட்சிகர மக்கள் செம்படை தமிழர்களைக் கொடூரமான சித்திரவதைக்குள்ளாக்கி கொலை செய்வதில் ஈடுபட்டுவருகின்றது என நேற்று முன்தினம் தமிழகத்தில் வெளியான தினமணி பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கொலை நடத்தும் பயங்கரவாத நடவடிக்கைகளில் சர்வசாதாரணமாக துணிச்சலுடன் ஈடுபடும் புரட்சிகர மக்கள் செம்படை (P.R.R A) சிங்களக் கொலைப்படை கிழக்கு மட்டக்களப்பில் நடமாடுவது முதன்முறையாகத் தற்போது தெரியவந்துள்ளது.

கழுத்தில் ரயரை மாட்டி தீயிட்டு உயிரோடு கொளுத்தப்பட்ட ஐந்து சடலங்கள் தெருமுனைகளில் காணப்பட்டன. இக்கொலைகளுக்குபுரட்சிகரசெம்படை உரிமை கோரியிருந்தது.

கடந்த ஆண்டு ஜே.வி.பி. தாக்குதல் உச்சக்கட்டத்தில் இருந்தபோது அதை ஒழிக்க தெற்கில் இச்செம்படையும் முழு மூச்சாக அழிப்பு வேலைகளில் ஈடுபட்டது.

செம்படையின் நடமாட்டம் இருப்பதினால் மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர். இவர்களின் நடமாட்டத்தால் மட்டக்களப்பில் சகஜ நிலை திரும்புவது பாதிக்கப்படும் என அரச ஊழியர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார் எனவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (மு)

## சில அகதி முகாம்களுக்கு அதிகாரிகள் செல்வதில்லை

(யாழ்ப்பாணம்)

சில பகுதிகளிலுள்ள அகதி முகாம்களுக்கு அப் பகுதி முகாம்களுக்குப் பொறுப்பான உதவி அரசாங்க அதிபரும், கிராமசேவகரும் முகாம் பக்கம் எட்டிப் பார்ப்பதில்லை. இதனால் அம் முகாம்களில் உள்ள அகதிகள் நிவாரண உதவிகளைப் பெற முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலால் இடம் பெயர்ந்த யாழ். மாவட்டத்திலுள்ளஒவ்வொருபகுதிஅகதி முகாம்களும் அப் பகுதி உதவி அரசாங்க அதிபரிடமும், கிராமசேவகரிடமும் மேற்பார்வை செய்து கவனிப்பதற்கு ஒப்படைக்கப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வி.பு.ம.முன்னணி செயலகம் குண்டு வைத்துத் தகர்ப்பு

(செட்டிகுளம்)

செட்டிகுளம் பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தை சிறிலங்கா இராணுவம் குண்டு வைத்து தகர்த்துள்ளது.

ஏற்கனவே இப் பகுதியிலிருந்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து விட்டதால் எதுவித உயிரிழப்புக்களும், நேற்றுக் காலை இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது ஏற்படவில்லை என அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன, (லோ)

## போக்குவரத்துதுண்டிப்பால் அரச அதிகாரிகள் சிரமம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மல்லாவி, துணுக்காய் பகுதிகளுக்கான போக்குவரத்து மாங்குளநகரத்தில் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் துணுக்காய் பாண்டியன்குள உதவி அரசாங்க அதிபர்கள் பரந்தன்வந்து முல்லைத்தீவு சென்று கச்சேரியுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இத் தடங்கலினால் இவர்கள் நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனராம். (58)

### புலிகள் இராணுவ நடவடிக்கையை நிறுத்தாவிடில்

# வடக்கு, கிழக்கில் உயிர்ச்சேதம் பொருட்சேதம் தொடருமாம்! - பிரேமதாசா கூறுகிறார்

(புத்தளம்)

வடக்கு, கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக் கொண்டால் மட்டுமே இப்பகுதிகளில் ஏற்படும் உயிர்ச்சேதம் பொருட்சேதங்களை தடுக்க முடியும் என்றும் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுப் புத்தளத்தில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் ஈ. பி. ஆர். எல். எப். ஈ. என். டி. எல். எப். ஆகிய கட்சியினர் விடுதலைப் புலிகளை மிஞ்சும் நோக்கில் ஒருதலைப்பட்சமாக தனிநாட்டு பிரகடனத்தை மேற்கொண்டதுடன் முதலமைச்சரும் பதவியை விட்டு வெளியேறினார்.

இதனால் தேர்தல்கள் நடாத்த வடக்கு, கிழக்கு மாகாணசபையை கலைக்கும் நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

மாகாணசபைகள் சட்டத்தின் கீழ் மாகாணசபைக்கு வழங்கப்பட்டுள்ள அதி[illegible]ரங்களை திரும்ப பெறும் [illegible]ாக்கம் அரசுக்கு இல்லை.

மாகாணசபைகளுக்கு அ[illegible] காரம் இல்லை என்று சி[illegible]ரும், அதிகாரம் அதிகம் என்[illegible] சிலரும், மாகாணசபைகளை ஒழிக்கவேண்டும் என்று சிலரும் கூறுகின்றனர். இனிமேல் சர்வதேச சமூகத்தின் பங்குபற்றுதலுடன் மட்டுமே மீண்டும் விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடாத்தும்.

அரசு ஏற்றுக்கொள்ளக் கூடிய சர்வதேச சமூகம் பங்கு கொள்ளும் ஏற்பாட்டின் மாத்திரமே இது நடாத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## 50க்குமேற்பட்ட பவுண் திருட்டு

(விசேட நிருபர்)

நேற்று முன்தினம் இரவு குருநகர், றெக்கிளமேசன் மத்திய கிழக்குவீதி ஞானேந்திரன் என்பவரது வீட்டில் ஐம்பதிற்கும் மேற்பட்ட தங்கப்பவுண் நகைகள் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜன்னல் வழியாக வீட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்களின் சுழற்சிமுறை வைத்திய சேவை

(முல்லைத்தீவு)

யாழ். செஞ்சிலுவைச்சங்கம் முல்லைத்தீவு மாவட்டத்தில் வைத்திய வசதியை பரவலாக்கி வருகிறது.

இந்த வகையில் செம்மலையில் ஒரு குழுவினர் அளம்பில், செம்மலை, குமுழமுனைக் கிராமத்தை மேற்பார்வையிடுவதும் புதுக்குடியிருப்புக்குழுவினர் வலயன்மடம், பொக்கணை, வள்ளிபுரம், விஸ்வமடுப்பகுதிகளை பார்வையிட்டு வருகின்றனர். முள்ளியவளை, தண்ணீரூற்றுப்பகுதியில் இருக்கும் குழுவினர் வற்றாப்பளை வரை சேவையை விஸ்தரித்துள்ளனர்.

யாழ். போதனாவைத்தியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் சுழற்சி முறையில் வைத்தியசேவை செய்வதுடன் இந்தச்சேவையை விஸ்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வரிவிளம்பரம்

**இடம் மாற்றம்**

அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு சேவை செய்யும் முகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)

### விற்பனைக்கு

**V. K. M. FARM CENTRE**

எம்மிடம் சுகாதாரமுறைப்படி தயார்செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி (Layer Mash) விற்பனைக்குண்டு. இறைச்சிக் கோழி, புறோயிலர்ஸ் என்பனவும் மிகக்குறைந்தவிலையில் பெற்றுக் கொள்ளலாம். No 12 சனசசபைலேன் (யாழ் இந்துக்கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

(R 508)

## வங்கி திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

இதுவரை மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மேற் கொண்டுவந்த இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை பொது மக்களின் நன்மை கருதி இன்று திங்கள் முதல் காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை கொடுக்கல் வாங்கல்களுக்காக திறந்திருக்கும் என வங்கி முகாமையாளர் அறியத்தருகிறார்.

இன்றைய போராட்டச் சூழலில்

# எமது தேவையை நாமே பூர்த்தி செய்ய சகல தரப்பும் இணையவேண்டும்

இன்றைய போராட்ட சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப்பொருட்களை வட-கிழக்கு பகுதிக்கு கடல்மார்க்கமாகக் கொண்டுவருதலையும், தரைமார்க்கமாகக் கொண்டு வருதலையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சிறிலங்கா அரசு தடுத்து வருவது யாவரும் அறிந்ததே. இந்தப்போர் நீண்டகால யுத்தமாக மாறி வருகின்ற நிலையில் உணவுத் தேவைகளை எமது பிரதேசத்திலேயே உற்பத்தி செய்வது மிகவும் அவசியமாகிறது. இதற்காக குறுகியகாலப் பயிர்களையும் அவை உற்பத்தி செய்யக்கூடிய பகுதிகளையும் இனங்கண்டு செயற்படுத்தும் சமூகத்தின் எல்லா தரப்பு மக்களையும் இந்த முக்கிய பணியில் இணைத்துக் கொள்வதும் அவசியமாகின்றது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் செயற்திட்டம் உடனடியாக அமுல் செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அமைப்புக்கள்-

**கிராமிய உற்பத்திக் குழுக்கள்**

கிராம அபிவிருத்தியை சனசமூக நிலையப் பிரதிநிதி ஒருவரும் விவசாயத்தில் அக்கறையுள்ளவர்களும் தொழில்நுட்ப அனுபவமுள்ளவர்களுமாக ஏழுபேர்கொண்ட குழுக்கள் கிராமிய மட்டத்தில் அமைக்கப்படும். அந்தந்தக் கிராமத்திலுள்ள வளங்களின் அடிப்படையில் அவற்றை உணவுஉற்பத்திக்கும் அத்தியாவசிய தேவைகளின் உற்பத்திக்கும் மற்றும் உட்படுத்தும் நோக்கத்தைக் கொண்டவையாகவும் இக்குழுக்கள் அமையும்.

**ஒருங்கிணைப்புக் குழுக்கள்**

ஆரம்பத்தில் இவை கமநல சேவை நிலைய மட்டத்தில் அமைக்கப்படும். தற்பொழுது நடைமுறையில் உள்ள குழுக்களை சீரமைத்து கீழ்வருவோரையும் ஒன்றிணைத்து மேற்படி குழுக்கள் அமைக்கப்படும்.

பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர், விவசாயக் குழுத்தலைவர், கிராமிய விவசாய மற்றும் உற்பத்திக்குழுக்களின் பிரதிநிதிகள், பொறியியல் தொழில் நுட்பத்துறையில் அனுபவம் பெற்றவர் இருவர், மீன்பிடித்துறையில் தகைமை பெற்றவர் ஒருவர்.

உணவு உற்பத்தித் திட்டத்தை அமுலாக்குவதும் நிறைவேற்றுவதும் கிராமிய உற்பத்தியில் குழுக்களின் முக்கிய பணியாகும். திட்டத்தை செயற் படுத்துவதில் ஏற்படும் விவசாய தொழில்நுட்ப பிரச்சினைகளையும் அவைசம்பந்தமான அறிவுரைகளையும் கமநல சேவைநிலைய மட்டக் குழுக்கள் வழங்கும்.

இனங்காணப்பட்ட உற்பத்திக்கு உடனடியாகக் கவனம் செலுத்தப்படவேண்டிய பயிர்கள்: குரக்கன், சாமை, தினை, வற்றாளை, மரவள்ளி, பாசிப் பயறு, கௌப்பி என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட பயிர்கள் யாழ்.மாவட்டத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருத்தமான விவசாய போதனாசிரியர் பிரதேசங்கள்.

குரக்கன்- கீரிமலை, புத்தூர், சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம், உடுவில் புலோலி, கைதடி, உரும்பிராய்.

சாமை- கீரிமலை, உடுவில், புத்தூர், உரும்பிராய்.

தினை- கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, உரும்பிராய்

வற்றாளை- சாவகச்சேரி, கைதடி.

மரவள்ளி- சாவகச்சேரி, நல்லூர், கீரிமலை, உடுவில், புத்தூர், கைதடி, உரும்பிராய்

பாசிப்பயறு- சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம், கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, கைதடி, உரும்பிராய்.

கௌப்பி- சாவகச்சேரி, நல்லூர், உரும்பிராய், கைதடி, புலோலி என்பனவாகும்.

இந்திய - பாகிஸ்தான்

# யுத்தம் முழுமேனில் அணு ஆயுதம் பயன்படுத்தப்படலாம்

## அமெரிக்கா கவலை

(புதுடில்லி)

காஷ்மீர் பிரச்சினைகளின் நிமித்தம் இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமைகளால், இருநாடுகளுக்கும் இடையில் யுத்தம் ஒன்று ஏற்படும் பட்சத்தில் அணு ஆயுதம் பயன் படுத்தப்படும் நிலை ஒன்று ஏற்படலாம் என்று அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான முறுகல் நிலைமைகளை தடுக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் ஒரு அம்சமாக அமெரிக்காவின் செனட் சபையின் வெளியுறவு கமிட்டியின் ஒரு அங்கத்தவரான திரு. அலன் கிரன்ஸ்டன் இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான விஜயமொன்றினை மேற் கொண்டுள்ளார்.

திரு. கிரன்ஸ்டன் இந்தியப் பிரதமர் திரு வி. பி சிங், பாகிஸ்தான் பிரதமர் திரு திபெனாசிர் பூட்டோ ஆகியோரை சந்தித்து உரையாடிய பின்பு அமெரிக்காவின் இந்தக் கவலையை தெரிவித்ததுடன்; இருநாடுகளுக்குமிடையில் அணு ஆயுதத்தை பிரயோகம் செய்யும் நோக்கம் இல்லையெனினும்; அப்படி யுத்தம் ஒன்று ஆரம்பித்து அது நீடிக்கும் பட்சத்தில் தம்மிடமுள்ள எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தும் நிலைமை தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளும் அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றவா என்பது குறித்து எமக்கு திட்டவட்டமாக கூறமுடியாதுள்ளது எனக் கூறியுள்ள திரு கிரன்ஸ்டன் இருநாடுகளுமே ஒரு சில வாரங்களுக்குள் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் வல்லமை கொண்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு கமிட்டியின் உறுப்பினரான திரு. கிரன்ஸ்டனுடனான சந்திப்பின் போது, காஸ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளில் அங்குள்ள தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து உதவி அளித்து வருவதாக குற்றம்சாட்டியுள்ள இந்தியப் பிரதமர் திரு. வி. சிங், பாகிஸ்தானின் இந்த நடவடிக்கையே இரு நாடுகளுக்குமிடையில் ஒரு மாமூல் நிலை உருவாக தடையாக இருப்பதாகவும் வருத்தம் தெரிவித்துள்ளார்.

அண்டை நாடுகளான நேபாளம், இலங்கை, பங்களாதேஷ், சீனா ஆகியவற்றுடன் இந்தியா நட்புறவை வளர்த்து வரும் அதேவேளை இதற்கு பாகிஸ்தான் விதிவிலக்காகவும், சவாலாகவும் இருந்து வருவதாகவும் பிரதமர் சிங் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ந்து நிலவிவரும் முறுகல் நிலையை அகற்றும் நடவடிக்கையின் ஒரு முன்னோடி அம்சமாக இவ்விரு நாடுகளின் வெளியுறவு செயலாளர்களின் மகாநாடு இம்மாத இறுதியில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# தமிழரை அழிக்க படை தயாராகிறது விரட்டியடிக்க தயாராகுங்கள்

(கிளிநொச்சி)

வடக்கு நோக்கிப் பெரும் படை ஒன்று நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப் பாதி வழியிலே அடித்துத் திருப்பி அனுப்பும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள். இப் புனிதப் பணியில் ஈடுபட வீட்டுக்கு ஒரு வீரனை அனுப்புங்கள்.

கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய பாரதிபுரப் பிரதேச அரசியற்பொறுப்பாளர் பி.பிரசாந் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அங்கு பேசிய திரு. பிரசாந்பெரும் தொகை

போதுதான் எமது மண்மீட்புப் போரில் நாம் வெற்றியடைய முடியும்.

"முடங்கிக் கிடக்கும் இவ் ஆயுதங்களை பாவிக்க, தமிழீழத்தை மீட்க வீட்டுக்கு ஒரு வீரனைத் தாருங்கள் என்று தாய்மாரைப் பார்த்துக் கேட்கிறோம்."

சிங்கள ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு தமிழ் மக்களை அழித்து வருகிறது. வாழப் பிறந்த எம்மை அழிக்க வென்றே படையினரையும், குண்டர்களையும் வடக்கு நோக்கி அனுப்பியுள்ளது. இதனை விளங்கிக் கொண்டு நாம் செயல்பட வேண்டியது

வொருவரும் உடனடியாக உற்பத்தியாக்க வேண்டும். அப்போதுதான் எமது உணவுத் தேவையை ஓரளவாவது பூர்த்தி செய்ய முடியும். இல்லாது விட்டால் நாம் பட்டினி கிடந்து சாக வேண்டி வரும்.

ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடவேண்டும். மழையை நம்பியிராது இருக்கும் நிலத்தில் கிணற்று நீரைப் பாவித்து, உள்ளூர்ப் பசளைகளைக் கொண்டே பயிர்களைச் செய்து எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

# எரிபொருள் விலைக்கு கட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

எரிபொருட்களை விற்பனை செய்வதற்கு தற்போது எந்த விலைக் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் அமுலில் இல்லை என்பது எரிபொருள் விற்பனையாளர்களுக்கு அறியத் தரப்படுகிறது.

சில எரிபொருள் வியாபாரிகள் தென்பகுதியிலிருந்து குடாநாட்டிற்குள் துவிச்சக்கர வண்டிகளின் மூலம் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டு வருவதும் தற்போது கவனிக்கக்கூடியதாக உள்ளது. இவர்கள் தாம் கொண்டுவந்த எரிபொருள்களை சந்தை விலையில் விற்பதற்கு எதுவித தடையும் விதிக்கப்படமாட்டாது எனவும் தெரிய வருகிறது.

(லோ)

பாலஸ்தீன விடுதலை

# இயக்க தளங்கள் மீது இஸ்ரேல்றொக்கட்தாக்குதல்

(பெய்ரூட்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இரண்டு பிரதான தளங்கள் இஸ்ரேலினால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரிபோலி கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த இரண்டு தளங்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளன. இஸ்ரே

தலை இயக்கத்தினர் இந்தத் தளங்களிலிருந்தே மேற்கொண்டு வந்ததாக இஸ்ரேல் கூறியுள்ளதுடன், தமக்கெதிரான தாக்குதல்களை முறியடிக்கும் நடவடிக்கையாகவே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தளங்கள் மீதான திடீர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

கிறார்.

அமைப்புக்கள்-

# விரட்டியடிக்க தயாராகுங்கள்

(கிளிநொச்சி)

வடக்கு நோக்கிப் பெரும் படை ஒன்று நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைப் பாதி வழியிலே அடித்துத் திருப்பி அனுப்பும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள். இப் புனிதப் பணியில் ஈடுபட வீட்டுக்கு ஒரு வீரனை அனுப்புங்கள்.

கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய பாரதிபுரப் பிரதேச அரசியற்பொறுப்பாளர் பி.பிரசாந் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அங்கு பேசிய திரு. பிரசாந்பெரும் தொகையான ஆயுதங்கள் எம்மிடம் உண்டு. அவை தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குப் பாவிக்கப்பட வேண்டும். அப்போதுதான் எமது மண்மீட்புப் போரில் நாம் வெற்றியடைய முடியும்.

''முடங்கிக் கிடக்கும் இவ் ஆயுதங்களை பாவிக்க, தமிழீழத்தை மீட்க வீட்டுக்கு ஒரு வீரனைத் தாருங்கள் என்று தாய்மாரைப் பார்த்துக் கேட்கிறோம்.''

சிங்கள ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு தமிழ் மக்களை அழித்து வருகிறது. வாழப் பிறந்த எம்மை அழிக்கவென்றே படையினரையும், குண்டர்களையும் வடக்கு நோக்கி அனுப்பியுள்ளது. இதனை விளங்கிக் கொண்டு நாம் செயல்பட வேண்டியது அவசியமானதாகும்.

'எமக்குத் தேவையான உணவுப் பயிர்களை ஒவ்வொருவரும் உடனடியாக உற்பத்தியாக்க வேண்டும். அப்போதுதான் எமது உணவுத் தேவையை ஓரளவாவது பூர்த்தி செய்ய முடியும். இல்லாது விட்டால் நாம் பட்டினி கிடந்து சாக வேண்டி வரும்.

ஒவ்வொருவரும் வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபடவேண்டும். மழையை நம்பியிராது இருக்கும் நிலத்தில் கிணற்று நீரைப் பாவித்து, உள்ளூர்ப் பசளைகளைக் கொண்டேபயிர்களைச் செய்து எமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். அவை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். (49)

## எரிபொருள் விலைக்கு கட்டுப்பாடு இல்லை

(யாழ்ப்பாணம்)

எரிபொருட்களை விற்பனை செய்வதற்கு தற்போது எந்த விலைக் கட்டுப்பாட்டு நடைமுறைகளும் அமுலில் இல்லை என்பது எரிபொருள் விற்பனையாளர்களுக்கு அறியத் தரப்படுகிறது.

சில எரிபொருள் வியாபாரிகள் தென்பகுதியிலிருந்து குடாநாட்டிற்குள் துவிச்சக்கர வண்டிகளின் மூலம் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்டு வருவதும் தற்போது கவனிக்கக்கூடியதாக உள்ளது. இவர்கள் தாம் கொண்டுவந்த எரிபொருள்களை சந்தை விலையில் விற்பதற்கு எதுவித தடையும் விதிக்கப்படமாட்டாது எனவும் தெரிய வருகிறது. (லோ)


வாடிக்கையாளருக்கு இடமாற்றம் பற்றிய அறிவித்தல்

இப்பொழுது உள்ள பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக

விக்கினேஸ் ரெக்ஸ்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனத்தை

தற்பொழுது

விக்கினேஸ் ரெக்ஸ்
78, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு மாற்றியுள்ளோம்.

(B/1219)


## உணவுப் பொருளுக்கு தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

தற்போதுள்ள போக்குவரத்து சீர்கேட்டினால் தீவுப் பகுதியில் உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்ற இடங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அராலித் துறை ஊடாக பொருள்களைக் கொண்டு செல்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் பொருள்களைக் கொண்டு வரும் வியாபாரிகள் இப் பாதையில் சேவையிலீடுபடும் வாகனங்கள், படகு என்பவற்றுக்கு கூடுதலான கட்டணத்தைச் செலுத்த வேண்டி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (22)

## பதுங்கு குழிகள் அமைப்பதில் மாணவர், ஆசிரியர்கள் ஈடுபாடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியிலுள்ள மாணவர்கள் இராணுவமுகாம்களிற்கு அருகேயுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண்களில் பதுங்குகுழிகளை வெட்டியும் மண்மூடைகளை அடுக்கியும் வருகிறார்கள். தொடர்ந்துநடைபெற்றுவரும் இவ்வேலைத்திட்டத்தில் தினமும் தனியார்கல்வி நிலையங்களைச் சேர்ந்த பெருந்தொகையான மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டுவருகிறார்கள். இம் முயற்சியில் மாணவிகள் சுறுசுறுப்புடன் முழுமூச்சாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (மு)

## அகதி முகாம்களில் பிரார்த்தனை

(கொழும்புத்துறை)

தென்மராட்சியில் உள்ள அகதிகள் முகாம்கள் தோறும் பிரார்த்தனைகள் செய்ய உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை தலைமையில் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றது. இதில் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்க உறுப்பினர்களும், இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்களும் இணைந்து பங்குகொண்டு வருகின்றனர். (24)

## கராஜில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆனைப்பந்தியிலுள்ள கராஜ் ஒன்றிலிருந்து றேடியோ, பெற்றோல் உட்பட பல பொருட்கள் கடந்த வெள்ளிக்கிழமை களவாடப்பட்டுள்ளது.

தற்பொழுது இடம்பெற்று வரும் அசம்பாவிதங்களின் நிமித்தம் மேற்படி கராஜ் மூடப்பட்டிருந்த பொழுதே திருடர்களால் கதவு உடைக்கப்பட்டு இந்தக் கைவரிசை காட்டப்பட்டுள்ளது. இக் கராஜ் திருநாவுக்கரசு என்பவருக்கு சொந்தமானதாகும்.


தரமான - நாகரிகமான
'சேட்டிங்' துணி வகைகள்
வேட்டிகள் மற்றும்
புடவை வகைகளின்
உற்பத்தியாளர்களுள் தனித்துவம்
மிக்கவர்கள்

கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தாவடி வடக்கு,
கோக்குவில்.

உங்கள் திருப்தியே
எங்கள் மகிழ்ச்சி!

(B1220)


## பஸ் இல்லாமையால் பயணிகள் கஷ்டம்

(கொழும்புத்துறை)

அண்மையில் கொழும்பில் இருந்து வந்த பயணிகள் உள்ளூர் பஸ் சேவைகள் இன்மையால் நீண்ட தூரம் நடந்தே தத்தமது இடங்களுக்குச் சென்றனர்.

சகல பயணிகளும் யாழ். நல்லூர் முத்திரைச் சந்தையடியில் இறக்கப்பட்டிருந்தனர்.

பிரயாணக் களைப்பு, பசிக் கொடுமையினால் தவித்து வந்த இவர்களை சிலர் தாமாக முன்வந்து சைக்கிள்களில் ஏற்றி அவரவர் இடங்களில் கொண்டு சென்றும் விட்டனர். (24)

## தீவுப்பகுதியில் பொம்மர் நடமாட்டம்

(புங்குடுதீவு)

தீவுப் பகுதியினைச் சுற்றி தற்போது அடிக்கடி பொம்மர்களும், அவ்ரோ விமானங்களும் பறந்து திரிகின்றன. நள்ளிரவு, அதிகாலை, நண்பகல் என்று எந்நேரமும் இவை பறந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பகுதியைச் சுற்றியுள்ள கடற்பிராந்தியத்தில் வீரசூர்யா போன்றபாரிய கடற்படை ரோந்துப் படகுகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (22)

றவா என்பது குறித்து எமக்கு

உள்ளது குறிப்பிடத்தக்கது.

பாலஸ்தீன விடுதலை

## இயக்க தளங்கள் மீது இஸ்ரேல்றொக்கட்தாக்குதல்

(பெய்ரூட்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் இரண்டு பிரதான தளங்கள் இஸ்ரேலினால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரிபோலி கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த இரண்டு தளங்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளன. இஸ்ரேலுக்கு சொந்தமான போர் விமானங்களால் நடத்தப்பட்ட இந்த றொக்கட் தாக்குதல் ஒரு திடீர் நடவடிக்கை என்று கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் இந்தத் தளங்களிலிருந்தே மேற்கொண்டு வந்ததாக இஸ்ரேல் கூறியுள்ளதுடன், தமக்கெதிரான தாக்குதல்களை முறியடிக்கும் நடவடிக்கையாகவே பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தளங்கள் மீதான திடீர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த தாக்குதல்களின் நிமித்தம் பாரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்படவில்லையென பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்விவகாரத்தில்தலையிட்டால் சீனா சும்மா இருக்காது

(பீக்கிங்)

''சீனாவின் உள் விவகாரங்களில் வெளியார் எவரும் தலையிடக் கூடாது. அப்படி தலையிடப்படும் பட்சத்தில் அதனை சீனா பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது'' என்று மேற்குலக நாடுகளுக்கு சீனா கடும் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

மேற்குலகை சேர்ந்த ஏழு கைத்தொழில் முன்னணி நாடுகளின் உச்சி மகாநாடு அடுத்த வாரத்தில் அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. இம் மகாநாட்டின் போது சீனா சோவியத் யூனியன் ஆகிய நாடுகளின் கொள்கை குறித்து ஆய்வு செய்யப்பட உள்ளதாக மகாநாட்டின் உயர்மட்டக் குழு அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்தே சீன கம்யூனிஸ்ட் கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்குலக நாடுகளுக்கான இந்த எச்சரிக்கையை தொடுத்துள்ளது.

சீனாவுக்கு எதிராக மேற்குலக நாடுகள் மேற்கொண்டிருக்கும் பொருளாதாரத் தடை அகற்றப்படல் வேண்டும் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வருடத்தில் மாணவர் ஆர்ப்பாட்டங்களும், மக்கள் எழுச்சிகளும் பீக்கிங்கில் உருவாகின. இந்த எழுச்சிகளை சீன அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அடக்கியதும், இந்த நடவடிக்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் சீனாவின் மீது பொருளாதார தடை விதித்து தொடர்ந்து நடைமுறையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமெரிக்காவின் வழிக்காட்டலில் செல்ல வேண்டாமென்று யப்பானுக்கு சீனா வேண்டுகோள் விடுத்துள்ளதுடன்; சுயமாக சிந்தித்து சீனாவுடனான உறவை வளர்த்துக் கொள்ள முன்வர வேண்டும்என்றும் கம்யூனிஸ்ட் கட்சி யப்பானுக்கு நேசக்கரம் நீட்டியுள்ளது.

## இரண்டு பொலிஸார் பஞ்சாப்பில் பலி!

(பஞ்சாப்)

தீவிரவாதிகளுக்கும், பொலிஸாருக்கும் இடையில் பஞ்சாப் மாநிலத்தில் இடம் பெற்ற மோதலொன்றின் போது இரண்டு பொலிஸார் பலியாகியுள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளார்கள்.

புதியஅமிர்தசரஸ்சுக்கு அருகில் இடம் பெற்ற இந்த மோதலில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

திண்டுக்குளி கிளை நூலகம்



### சிந்தனைக்கு

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்.

– தேசிக விநாயகம்பிள்ளை

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 09-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# நெஞ்சில் உறுதி வேண்டும்

தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா சிங்கள அரசு தொடுத்த போர் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஓரிரு தினங்களில் அல்லது ஓரிரு வாரங்களில் போராளிகளை ஒழித்துக்கட்டிவிடலாமென சிறிலங்கா அரசு கற்பனை செய்த போதிலும் ஒருமாதமாகியும் இன்னமும் போர் முடியவில்லை.

சிறிலங்கா சிங்கள அரசு இப்பொழுது சிங்கள மக்களை நீண்டகாலப் போருக்குத் தயார் செய்துகொண்டு வருகிறது.

நீண்டகாலப் போருக்கு மட்டும் அரசு ஆயத்தப்படுத்தவில்லை; இன ஒழிப்புக்கும் இலங்கை சுதந்திரம் பெற்ற பொழுதே போட்ட திட்டத்தை இனி வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சிங்கள மக்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறது.

1983ஆம் ஆண்டின் பின் லலித் அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்தபோதும் தமிழரை அழிப்பதற்கென சிங்கள மக்களை குறுகிய காலப் பயிற்சிக்குப் படைதிரட்டியதுடன் சிங்கள மக்கள் மனதில் தமிழருக்கு எதிரான துவேஷத்தைத் தூண்டுவதற்குப் பாதுகாப்பு நிதியையும் ஆரம்பித்தார்.

இன்று சமாதானமும், தர்மமும் பேசும் பிரேமதாசா அரசும் சிங்கள இளைஞர்களைப் படைக்குத் திரட்டுவதும், பாதுகாப்பு நிதி என்று சிங்கள மக்கள் மத்தியில் தமிழருக்கு எதிரான வெறியை ஏற்படுத்தவும் நிதி திரட்டுகிறது.

தமிழ் மக்களையும், மண்ணையும் காப்பதற்காக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களுடன் எதிர்த்து நேருக்கு நேர் போர் புரிவதற்குத் திராணியற்ற சிறிலங்கா அரச படைகள் தங்கள் முகாம்களிலிருந்து கண்மூடித்தனமாக குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதும், விமானங்களிலிருந்து குண்டு வீசித் தாக்குவதும், கடற்கரைகளிலிருந்து பீரங்கித் தாக்குதல் நடத்துவதுமாக தமிழ்ப் பொதுமக்கள் மீது மும்முனைத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று குவிக்கின்றன.

இதேசமயம் சிங்களவர்கள் பெரும்பான்மையாகத் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட பகுதிகளில் சொந்த மண்ணில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள்மீது சிங்களக் காடையர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து கொலை வெறியைத் தூண்டிவிட்டு அட்டூழியம் புரிய வைத்திருக்கிறது சிறிலங்கா அரசு.

---

✻ மில்லரின் நினைவாக........

# கரும்புலி கப்டன் மில்லரின் தாக்குதலின் தாக்கம்



ஒரு போர் வீரனின் தன்னலமற்ற தியாகத்திற்கு இரண்டாம் உலகப் போரின் போது வெடிகுண்டு ஒன்றைக் கையிலேந்திக்கொண்டு எதிரியின் யுத்தக்கப்பல் ஒன்றின் புகைக் கூண்டுக்குள் குதித்த ஜப்பானிய போர் வீரன் ஒருவனை முன் உதாரணம் காட்டிக்கொண்டிருந்த உலகின் கண்முன் கப்டன் மில்லர் தன்னையே முழுமையாக அர்ப்பணித்து புதியதோர் அத்தியாயத்தின் உதாரண புருஷனாக உருவெடுத்த நாளாக 1987 ஜுலை மாதம் ஐந்தாம் நாள் அமைந்துவிட்டது. இத்தினத்தில் விடுதலைப் புலிகளால் நெல்லியடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையானது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாகும். இராணுவ ரீதியாக ஸ்ரீலங்கா அரசுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவால் மட்டுமல்ல இராணுவ மொழியில் புத்தி புகட்டிய தாக்குதலாகவும் அமைந்தது. அரசியல் ரீதியாக புதியதோர் வரலாற்று நிகழ்வின் திருப்புமுனை மட்டுமல்ல அதன் ஆரம்பப்படி நிலையும் அதுதான். உளவியல் ரீதியாக சிங்கள சிப்பாய்களுக்கு ஒரு பின்னடைவையும் தமிழ்ப் பொதுமக்களுக்குப் போராட்டம் தொடர்பான புது நம்பிக்கையையும் இத்தாக்குதல் ஏற்படுத்தியது.

''ஒப்றேசன் லிபறேசன்'' என்ற சங்கேத மொழி பேசிக் கொண்டு வடமராட்சி மீதான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்துவிட்டு இறுமாப்படைந்திருந்த இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியில் விடுக்கப்பட்ட ஒரு பகிரங்க சவாலாகவே இத்தாக்குதல் அமைந்தது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது உறுதியானது மட்டுமல்ல ஒரு குறிக்கோளை நோக்காகக் கொண்ட தொடர்ச்சி முறிவடையாத நகர்த்தல் தான் என்பதை உறுதிபட இத்தாக்குதல் உரைத்தது நதிகள் எப்படிப் பின்னோக்கிப் பாய்வதில்லையோ வரலாறும் அப்படியே. போராட்டத்தில் ஏற்படும் பின்னடைவுகள் தற்காலிகமானவை. அவை போராட்டத்தின் முற்றுப்புள்ளியாகி விடுவதில்லை. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியதிகளும் இவ்வாறானவையே எந்தவொரு இராணுவ ஒடுக்குமுறைகளாலும் தமிழ்த் தேசிய விடுதலைப் போரை நிர்மூலப்படுத்திவிடமுடியாது. என்பதை கப்டன் மில்லரும் மேஜர் கமலும் போராளி வின்சனும் சிங்கள அரசுக்கு இடித்துச் சொன்னார்கள்.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு கண்டுவிடலாம். என ஜே. ஆரும் அத்துலத் முதலியும் அவரது இராணுவத் தளபதிகளும் கனவு கண்டு கொண்டிருந்த வேளையில் மேற் கொள்ளப்பட்ட இத்தாக்குதலால் நெல்லியடி இராணுவ முகாமின் கட்டிடங்கள் மட்டும் சிதைந்து போய் விடவில்லை, ஜே.ஆரின் பாசிச அரசின் மனக்கோட்டைகளும் உடைந்து நொருங்கி சிதைந்து போயின. இதனால் தான் அக்கால கட்டத்தில் வடமராட்சிப்பகுதி இராணுவ இணைப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் ரூபசிங்கா 'நெல்லியடித் தாக்குதல் எமது இராணுவ நடவடிக்கைகளுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவால்'' என்றார். இக்காலகட்டத்தில் அதாவது வடமராட்சி இராணுவ நடவடிக்கை நடைபெற்ற கையோடு அவுஸ்ரேலிய பத்திரிகையாளரான Mc Donald க்கு கொடுத்த பேட்டியில் அத்துலத் முதலி பின்வருமாறு குறிப்பிட்டார்.

''தீவிரவாதிகளை பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என அழைத்த காலம் போய் போருக்கு வாருங்கள் என அறை கூவல் விடுக்கும் காலம் இது'' என்றார். போருக்கு விடுத்த அறை கூவலை மில்லர் ஏற்று அத்துலத் முதலியின் முகத்தில் அறைந்து சிங்கள இனவாத அரசின் முதுகெலும்பையே முறித்து நொருக்கினான். சிங்கள அரசின் ஆணவம் அடங்கியது. அது இந்தியாவிடம் போய் சரணாகதி அடைந்தது. மில்லரும் தன்னையே முழுமையாக அர்ப்பணிக்கும் ஒரு போராட்ட வழியைக் காட்டி தன்னைத் தொடரும் கரும்புலிகளை உருவாக்கிவிட்டு மறைந்தான்.

இத்தாக்குதல் அக்கால கட்டத்தில் இந்தியாவுக்கு அரசியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியது. வடமராட்சி தாக்குதலின்போது சூழ்ச்சிகளைச் செய்து சிங்கள இராணுவத்தை முன்னேறச் செய்த இந்தியா அதன்பின் உணவுக் கப்பல்களை அனுப்பி விமான மூலம் உணவுப் பொட்டலங்களைப் போட்டு தானே ஈழத்து தமிழ் மக்களின் இரட்சகன் என நாடகம் ஆடியது. இந்த நாடகத்தின் மேடைக்கு ஒரு மூடுதிரை போட்டு நாங்கள் பலவீனப்பட்டுவிடவில்லை என்பதை விடுதலைப் புலிகள் இந்தியாவுக்கு இத்தாக்குதல் மூலம் உறைக்கத் தக்கதாக உணர்த்தினார்கள். நெல்லியடியில் விழுந்த அடியின் நோ தாங்கமுடியாமல் புதுடில்லியும் தனது முதுகைத் தடவிக் கொண்டது. ராஜீவ் காந்தி இத்தாக்குதலைக் கண்டித்து அறிக்கை விட்டமையே தக்க சான்றாகும்.

இந்தியாவின் இத்தகைய சூழ்ச்சியால் வடமராட்சியில் போராளிகளுக்கு ஏற்பட்ட தற்காலிக பின்னடைவுகள் தமிழ் மக்கள் மனதில் உளவியல் ரீதியான சில தாக்கங்களை உருவாக்கின என்பது ஒரு கசப்பான உண்மை. அந்த நிலையில் மில்லரின் தாக்குதல் தமிழ் மக்கள் மனதில் போராட்டம் தொடர்பாக ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது.

இத்தாக்குதலின்போது இந்த இராணுவ முகாமில் தங்கியிருந்த லெப். அனா. விஜயசிங்கா (கேகாலை), இரண்டாம் லெப். தாமா குணவர்த்தனா, இரண்டாம் லெப். அனா வன்னிநாயகா (கட்டுக்குறுந்த) ஆகிய மூன்று இராணுவ உயர் அதிகாரிகளோடு ஏராளமான சிங்கள சிப்பாய்களும் மாண்டுபோனார்கள். இது சிங்கள சிப்பாய்கள் மனதில் உளவியல் ரீதியில் பின்னடைவை ஏற்படுத்தியது இது ஜே. ஆரின் அணுகுமுறையில் மாற்றத்திற்கே வழிவகுத்தது. இதனால் இந்தியத் தலையீட்டை அவர் வெளிப்படையாகவே ஏற்றார் இதனால் இந்தியாவின் இராணுவத் தலையீட்டை தமிழ்ப் போராளிகளை ஒடுக்க ஜே. ஆர். ஏற்றுக்கொண்டார். இந்தியாவின் இராணுவத் தலையீடு போராட்டத்தை மற்றுமொரு திருப்பு முனைக்கே இட்டுச் சென்றது.

நேதாஜி

> கரும்புலி கப்டன் மில்லர் தனது மரணத்தின் நாழிகையைத் தானே நிர்ணயித்தான். தனது சவப்பெட்டியைத் தானே தன் முதுகில் சுமந்து சென்றான். தாயக விடுதலை பற்றிய புலப்பதிவுடன் தியாக வேள்வியில் ஆகுதியான இவனின் மரணம் கூட இன்னொரு ஜனனமே.

---

# ஒல்லாந்தரின் படுபயங்கரமான கோட்டை முற்றுகை!

## நாயும் பூனையும் உணவாகியும் 1600 பேர் மாண்டனர்

மடைந்திருந்தன ரென்றால் இடநெருக்கடி எவ்வளவு

ஒல்லாந்தர் உணர்ந்திருந்தனர்.

மூன்று மாதங்களுக்கு மேலாகக் கோட்டையின் கதவுகள் திறக்கப்படவே இல்லை போர்த்துக்கேயர் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தனர். மூன்று மாதங்களுக்குள் கோட்டைக்குள்ளிருந்தவர்களுக்கு பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்

கட்டுவதற்கு கூடவழியில்லை. மூன்று மாதங்களுக்குள் ஆயிரத்து அறுநூறு பேர் மாண்டனர். சரணடைவதைத் தவிர போர்த்துக்கேயருக்கு வேறு வழியிருக்கவில்லை ஆனாலும் கௌரவத்தை இழக்க அவர்கள் விரும்பவில்லை.

கடைசியில் போர்த்துக்கேயர் சரணடைவதற்கு ஒப்புக் கொண்டனர். தோல்வியடைந்த போர்த்துக்கேயர் கௌரவமாகக் கோட்டைக்குள்ளிருந்து தங்கள் கொடியைப் பறக்க விட்டவாறு வெளியே வருவதற்கு ஒல்லாந்தர் இணங்கினர்.

தமிழருக்கு எதிரான வெறியை ஏற்படுத்தவும் நிதி திரட்டுகிறது.

தமிழ் மக்களையும், மண்ணையும் காப்பதற்காக ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்களுடன் எதிர்த்து நேருக்கு நேர் போர் புரிவதற்குத் திராணியற்ற சிறிலங்கா அரச படைகள் தங்கள் முகாம்களிலிருந்து கண்மூடித்தனமாக குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது ஷெல் தாக்குதல் நடத்துவதும், விமானங்களிலிருந்து குண்டு வீசித் தாக்குவதும், கடற்கரைகளிலிருந்து பீரங்கித் தாக்குதல் நடத்துவதுமாக தமிழ்ப் பொதுமக்கள் மீது மும்முனைத் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்தி அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று குவிக்கின்றன.

இதேசமயம் சிங்களவர்கள் பெரும்பான்மையாகத் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட பகுதிகளில் சொந்த மண்ணில் வாழ்ந்துகொண்டிருந்த மக்கள்மீது சிங்களக் காடையர்களுக்கு ஆயுதங்கள் கொடுத்து கொலை வெறியைத் தூண்டிவிட்டு அட்டூழியம் புரிய வைத்திருக்கிறது சிறிலங்கா அரசு.

சிறிலங்கா அரசபடைகளின் தாக்குதல்கள், சிங்களக் காடையர்களின் கொலைவெறிச் செயல்கள் ஆகியவற்றால் உயிரையும், உடைமைகளையும் இழந்த தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாகி அவலமாக நிற்கிறார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் அகதிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டியதும், அவர்களின் துயர் தீர்க்க முன்வருவதும் அவர்களது கடமை.

இதேசமயம் கடந்த காலங்களைப் போன்று மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு நிலைமை சிறிது சீரானதும் திரும்பிச் செல்வதும் மீண்டும் அகதிகளாகத் திரும்பி வருவதும் இந்த யுத்தத்துடன் முடிவு காண்பதற்குத் தமிழ் மக்கள் உறுதியான, இறுதியான முடிவுக்கு வரவேண்டியகாலம் வந்துவிட்டது.

யூதர்களுக்கு இருக்கவே ஒரு இடமில்லாதிருந்தது. பாலஸ்தீனத்தில் பாலைவனத்தில் சென்று குடியேறி இன்று அது உலகில் சக்திவாய்ந்த ஒரு நாடாக இஸ்ரேல் என்னும் பெயருடன் விளங்கிக்கொண்டிருக்கிறது.

யூதர்கள் பாலஸ்தீனியரின் மண்ணை அபகரித்ததை நாம் ஏற்றுக் கொள்ளவில்லையானாலும் இருபத்திரெண்டு அரபு நாடுகளுக்கு மத்தியில் ஒரு சிறிய நாடாக இஸ்ரேலிருந்தாலும் அவர்களின் துணிச்சலும் திறமையும் தன்னம்பிக்கையும் தமிழ் மக்கள் இன்று பின்பற்ற வேண்டிய அம்சங்களாகும்.

யூதர்கள் ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றில் விஞ்ஞானிகளாகவும் பெரும் வர்த்தகர்களாகவும் வளர்ந்திருக்கிறார்கள். இஸ்ரேல் உருவானதற்கும், இன்று சக்தி வாய்ந்த நாடாக அது வளர்ந்துள்ளதற்கும் அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலுமுள்ள யூதர்களே காரணமாகும்.

இலங்கைத் தமிழர்கள் மூளைவளத்துக்குப் பெயர் பெற்றவர்கள். இன்றும் பல தமிழர்கள் வெளிநாடுகளில் இருக்கின்றனர். சமீபகாலத்தில் அகதிகளாகவும் வேலை வாய்ப்புத் தேடியும் சென்ற இளைஞர்களில் பெரும்பாலானவர்களும் கூட நல்ல நிலையிலேயே இருக்கின்றனர்.

வெளிநாடுகளில் இருக்கும் தமிழர்கள் தேடும் சம்பாத்தியம் பெண் பிள்ளைகளுக்குச் சீதனமாக வெளிநாட்டு மாப்பிள்ளைக்குக் கொடுக்கவும். காணிகளில் அள்ளிக் கொட்டவுமே பயன்படுத்தப்படுகிறது.

தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் சுதந்திரமாகவும்; பாதுகாப்பாகவும்; சுபீட்சமாகவும்; சுயநிர்ணய உரிமையுடனும் வாழவேண்டுமென்று உள்நாட்டிலுள்ள தமிழ் மக்களும் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களும் சகல வேறுபாடுகளையும் மறந்து ஒரே சிந்தனையுடன் செயல்பட்டால் நிச்சயம் சொந்த மண்ணிலேயே தமிழர் அகதிகளாகும் அவலம் இனியும் நேரமுடியாது.

இஸ்ரேலியருக்கு உள்ள ஒரே மனத் திடமும் ஒற்றுமையும்தான் இன்று தமிழ்மக்களுக்கு வேண்டும். இவை இருந்தால் தமிழ்ப்படை பெருகும், தமிழ் நிதி பெருகும், தமிழீழம் விரைவில் மலரும்.

---

டிக்கையை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான அப்பாவிப்

தான் அக்கால கட்டத்தில் வடமராட்சிப்பகுதி இராணுவ

கள இனவாத அரசின் முதுகெலும்பையே முறித்து

கும்.

இந்தியாவின் இத்தகைய சூழ்ச்சியால் வடமராட்சியில்

மொரு திருப்பு முனைக்கே இட்டுச் சென்றது.

---

# ஒல்லாந்தரின் படுபயங்கரமான கோட்டை முற்றுகை!

## நாயும் பூனையும் உணவாகியும் 1600 பேர் மாண்டனர்

**யாழ்ப்பாணக் கோட்டை உருவான வரலாறு - 2**

**செய்திக்கதிர் 01 - 03 - 1986 இதழில் வெளிவந்த கட்டுரையின் மறுபிரசுரம்**

ஒல்லாந்தர் யாழ்ப்பாணம் வந்திறங்கியதும் போர்த்துக்கேயர் தம்மால் ஒல்லாந்தருடன் தாக்குப்பிடிக்க முடியாதென்பதை உணர்ந்துகொண்டனர். போர்துக்கேயரின் தொகையைவிட ஒல்லாந்தர் அதிக அளவிலிருந்தனர். இந்நிலையில் தமது பாதுகாப்பு கோட்டைக்குள் தானிருக்கிறது என்று போர்த்துக்கீசர் நம்பினர்.

போர் வீரர்களுடன் கோட்டைக்கு வெளியே வாழ்ந்து வந்த போர்த்துக்கேயரும் சேர்ந்து கோட்டைக்குள் தஞ்சமடைந்தனர். கோட்டையின் கதவுகள் மூடிக்கொண்டன. இந்தக் கோட்டை இருந்த இடத்தில் பின்னர் ஒல்லாந்தர் நிறுவிய பெரிய கோட்டையில் கூட நானூறு போர் வீரர்கள்தான் தங்கியிருக்க முடியும். ஆனால் அந்தச் சிறிய கோட்டைக்குள் நாலாயிரம் போர்த்துக்கேயர் தஞ்சமடைந்திருந்தனரென்றால் இடநெருக்கடி எவ்வளவு மோசமாக இருந்திருக்க வேண்டுமென்று நினைத்துப் பார்ப்பதே கஷ்டம்.

கோட்டையை முற்றுகையிட்ட ஒல்லாந்தர் குண்டு வீச்சினால் சுவர்களை உடைப்பது சுலபமல்ல என்பதையும் உணர்ந்திருந்தனர். பீரங்கித் தாக்குதலால் குண்டுகளை வீணாக்கவும் அவர்கள் விரும்பவில்லை. அக்காலத்தில் பீரங்கிக் குண்டுகள் மிகவும் பெறுமதிவாய்ந்தவை. எனவே கோட்டை வாயிலை முற்றுகையிட்ட ஒல்லாந்தர் மோட்டார் நெருப்பை கோட்டைக்குள் வீசினர். கல்மாரி பொழிந்தனர். இந்த முற்றுகை நீடிக்கும் என்பதையும் ஒல்லாந்தர் உணர்ந்திருந்தனர்.

மூன்று மாதங்களுக்கு மேலாகக் கோட்டையின் கதவுகள் திறக்கப்படவே இல்லை போர்த்துக்கேயர் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தனர். மூன்று மாதங்களுக்குள் கோட்டைக்குள்ளிருந்தவர்களுக்கு பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சாப்பாட்டுக்கு வழியே இல்லை. கோட்டைக்குள் காணப்பட்ட நாய், பூனை அத்தனையும் உணவாகி முடிந்து விட்டன. சிறிது, சிறிதாக பலர் மடிந்துக் கொண்டிருந்தனர். கோட்டைக்குள்ளிருந்த கொஞ்சம் தண்ணீரும் கூட செத்துப்போனவர்களின் சடலங்களால் பழுதடைந்து விட்டது. காயமடைந்தவர்களுக்கு மருந்து கட்டுவதற்கு கூடவழியில்லை. மூன்று மாதங்களுக்குள் ஆயிரத்து அறுநூறு பேர் மாண்டனர். சரணடைவதைத் தவிர போர்த்துக்கேயருக்கு வேறு வழியிருக்கவில்லை ஆனாலும் கௌரவத்தை இழக்க அவர்கள் விரும்பவில்லை.

கடைசியில் போர்த்துக்கேயர் சரணடைவதற்கு ஒப்புக்கொண்டனர். தோல்வியடைந்த போர்த்துக்கேயர் கௌரவமாகக் கோட்டைக்குள்ளிருந்து தங்கள் கொடியைப் பறக்க விட்டவாறு வெளியே வருவதற்கு ஒல்லாந்தர் இணங்கினர்.

பட்டினி கிடக்க வைத்து பசியாலும், நோயாலும் உயிரிழந்த நிலையில் போர்த்துக்கேயரைச் சரணடையவைத்து யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றினர். 1658 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் தேதி ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை இறுதியாக கைப்பற்றினர்.

(தொடரும்)

---

# ஐரோப்பாவில் அணு ஆயுத விஸ்தரிப்பு சோவியத் கைவிட வேண்டும்!

## - நேட்டோ வேண்டுகோள்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் அணு, ஆயுதங்களை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளை சோவியத் யூனியன் கைவிட வேண்டும். இது சாத்தியப்படும் பட்சத்திலேயே நேட்டோ நாடுகளும் தமது அணு ஆயுத நிலைமையை தவிர்த்துக் கொள்ள முடியும் என்று லண்டனில் இடம் பெற்ற நேட்டோ அமைப்பு நாடுகளின் மகாநாடு தெரிவித்துள்ளது.

நேட்டோ அமைப்பின் இறுதி மகாநாடு இவ்வாறு குறிப்பிட்டிருப்பினும், அந்த அமைப்பு சோவியத் தலைவர் திரு. கொர்பசேவ் நேட்டோவின் பிரஸ்லிஸ் தலைமை அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நேட்டோவின் இந்த அழைப்பை திரு. கொர்பசேவ் ஏற்றுக் கொண்டுள்ளதாக சோவியத் அறிவித்தது டன்: நேட்டோவின் தலைமைச் செயலாளர் திரு. வால்டர் சோவியத்துக்கான அதிகாரபூர்வ பயண[illegible]றினை மேற்கொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேட்டோ அமைப்பு திரு. கொர்பசேவின் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு ஆதரவு அளித்துள்ளதுடன் ஒன்றிணைந்த ஜேர்மனி நேட்டோவில் அங்கம் வகிப்பதை சோவியத் யூனியன் ஏற்றுக் கொள்ளும் வகையில் நேட்டோவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதென்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை நேட்டோ நாடுகளும் – வார்சோ நாடுகளும் அச்சுறுத்தல்களுக்கு இடமளிக்காதுநட்புறவுகொள்ளல் வேண்டுமென்றும்; ஒன்றிணைக்கப்பட்டுள்ள ஜேர்மனியின் ஆயுதப் பலம்குறைக்கப்பட வேண்டும் என்றும் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

---

## தமிழ் நாட்டில்

# தமிழ் மக்கள் ஆவண பதிவு காலம்நீடிக்கப்பட்டுள்ளது

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களது ஆவணங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து கொள்வதற்கான காலக்கெடு இம்மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்டுள்ள இந்தத் திகதிக்குள் சகலரும் தமது ஆவணங்களை பொலிஸ்நிலையத்தில் பதிவுசெய்துகொள்ள வேண்டுமென்றும் தவறுவோர் மீது கடுமையான நட[illegible]வடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஆறாயிரத்துக்கு மேற்பட்டோர் இதுவரை தமது பெயர்களை குறிப்பிட்டபடி பதிவு செய்துள்ளதாகவும்; வீடுகளை இலங்கைத் தமிழர்களுக்கு வாடகைக்கு விட்டவர்களும் தமது பெயர்களை பதிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# 10 லட்சம் சோவியத் யூதர்கள் இஸ்ரேலில் மீளக் குடியமர்வு

[illegible]சுமார் பத்து இலட்சத்[illegible]கு மேற்பட்ட சோவியத் [illegible]தர்களை மீண்டும் இஸ்ரேலில் குடியமர்த்துவதற்கான முயற்சிகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வருகின்றது. அடுத்த வருட இறுதிக்குள் இந்தக் குடியேற்றம் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு மீளக் குடியமர உள்ள சோவியத் யூதர்களை குடியமர்த்துவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் யாவும் இஸ்ரேலில்மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. ஏரல் சரோன் தெரிவித்துள்ளார்.

இத்தனை பெருந்தொகையான யூதர்கள் இஸ்ரேலில் மீண்டும் குடியேற்றப்படுவதைத் தொடர்ந்து வேலை வாய்ப்பு, வீட்டு வசதிகள் என்பவற்றில் பல பற்றாக்குறைகள் ஏற்படும் என்று உள்ளூர் தலைவர்களால் எதிர்பார்க்கப்படுவதுடன்; சமூக சுற்றாடல் பிரச்சினைகளும் எதிர்நோக்கப்படலாம் என்று அந்நாட்டு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

Registered as a News at Paper the G. P. O.

# ஈழநாதம்

கிளிநொச்சியில்

# புலிகள் - இராணுவம் கடும் மோதல்

(கிளிநொச்சி)

கடந்த இரண்டு நாட்களாக கிளிநொச்சியில் இடம்பெற்ற கடும்மோதலில் கிளிநொச்சி இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது.

பொதுமக்கள் சிலரும் காயமடைந்துள்ளனர். கச்சேரி, கடைக் கட்டிடங்கள், வீடுகள் ஆகியனவும் சேதமாகின. இரண்டாம் நாள் பிற்பகல் மூன்று மணியளவில் கிளிநொச்சிஇராணுவமுகாமிற்கு விமானத்தில் இருந்து 8 உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டன.

கடந்த வெள்ளிக் கிழமை இரவு கிளிநொச்சிஇராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதலையடுத்து பல இராணுவத்தினர் உயிர் இழந்தனர்.

விடுதலைப்புலிகளும் முகாமை நோக்கி ஷெல் குண்டுகளை வீசினர். இதனால் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. விமானப்படையின்உதவிகோரப்பட்டுஹெலிகொப்ரர் ஒன்று உதவிக்கு வந்து பலத்த தாக்குதலை மேற்கொண்டது.

புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதை அடுத்து ஹெலிக்கொப்ரர் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் இரவு பதினொரு மணியளவில் திரும்பிச் சென்றது.

மறுநாள் சனிக்கிழமை அதிகாலையில் இரண்டு பொம்மர் விமானங்கள் வந்து சரமாரியாகக் குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. இத்தாக்குதலுக்கும் புலிகள் தரப்பில் பலத்த எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சுமார் 1 மணி நேரம் குண்டுமாரி பொழிந்த குண்டுவீச்சு விமானங்கள் திரும்பிச் சென்றன.

பிற்பகல் மூன்று மணியளவில்இரண்டு அவ்ரோவிமானங்கள் கிளிநொச்சி இராணுவ முகாமைச் சுற்றி வட்டமிட்டன. ஒரு விமானம் சரமாரியாகக் குண்டுகளை வீசியது. மற்ற விமானம் தாழப் பறந்து எட்டு உணவுப் பார்சல்களை முகாமில் இறக்கிவிட்டுச்சென்றது. (49)

## அகதிகளுக்கு உடை

கிழக்கில் இருந்து முல்லைத் தீவுக்கு இடம்பெயர்ந்தோருக்கு ஆடைகள் வழங்கும் வகையில் யாழ் பல்கலைக்கழக உயர் கல்வி மாணவர் ஒன்றியம் ஒரு குழுவை அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பகுதியில் இதுவரை உடைகள் கிடைக்காதவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

# "போராட்ட நிதி வழங்க சிந்திக்கத் தேவையில்லை

## "காங்கேசனிலிருந்து பொத்துவில் வரை போராட்டம் சான்று" - மூர்த்தி

(உடுவில்)

விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி செய்ய எண்ணுவோர் எமது போராட்டவளர்ச்சி பற்றி சிந்திக்கத்தேவையில்லை. இன்று எமது போராட்டம் ஒரேநேரத்தில் காங்கேசன்துறையிலிருந்து பொத்துவில்வரை சிங்கள இராணுவத்துடன் சரிசமமாக எதிர்த்து நின்று போரிடுமளவுக்கு நாம் முன்னேறியுள்ளோம். இன்று எம்மால் 25 பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மூன்று இராணுவ முகாம்களை மூன்று நாட்களில் கைப்பற்றியுள்ளோம். இந்த அனைத்து இராணுவ முகாம்களில் இருந்தும் ஏராளமான அதிநவீன ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளோம். ஆகவே எமது முன்னேற்றம் பற்றி எவரும் சிந்திக்கத் தேவையில்லைஎனநேற்று இடம்பெற்ற தமிழீழ மீட்புநிதி பற்றிய கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மத்தியகுழு உறுப்பினர் மூர்த்தி பேசுகையில் கூறினார்.

### பேச்சுவார்த்தைபற்றி

மேலும் அவர் கடந்தகால பேச்சுவார்த்தைபற்றிக் கூறும்பொழுது இப் பேச்சுவார்த்தைகள் மூலம் சர்வதேச ரீதியில் எம்மை நாம் உயர்த்திக் கொண்டுள்ளோம், ஜனாதிபதி பிரேமதாசா எம்மை கொழும்பிற்கு அழைத்தபோது அங்குள்ள அனைத்து தூதுவராலயங்களுடனும் தொடர்புகொண்டு எமது நிலைபற்றி அனைத்து நாடுகளுக்கும் விளக்கி உள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### திருப்பிக்கொடுப்போம்

அத்துடன் திரு. மூர்த்தி பேசும்பொழுது தமிழீழத்தை மீட்பதற்கானநிதியாக நீங்கள் எமக்கு வழங்கும் இந்த இரண்டு பவுண் தங்கத்தையும் எதிர்காலத்தில் மாதம் ஒன்றுக்கு நூறுபேர் வீதம் குலுக்கல் அடிப்படையில் திருப்பி வழங்குவோம். ஆகவே இந்த போராட்டத்தில் உங்கள் பங்களிப்பை கடனாக எமக்கு தந்து உதவுங்கள் என்றும் அவர் வேண்டினார்.

இக் கூட்டம் நேற்று மாலை நான்கு முப்பது மணியளவில் உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் ஏராளமான மக்கள் முண்டியடித்துக் கொண்டு தமிழீழ மீட்புநிதி விண்ணப்ப படிவங்களை நிரப்பியதை காணக்கூடியதாக இருந்தது. (லோ)

# உற்பத்தி விநியோகம் பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய தேவையான உற்பத்தி விநியோகம் பற்றி யாழ். சனசமூக நிலையங்களின் மட்டத்திலான கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்நகரில் நடைபெற்றது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட இக் கருத்தரங்கில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் ஆரம்பித்தல், வீட்டுத் தோட்டங்கள் ஆரம்பித்தல், வெற்று நிலங்களை பயிர்செய்கைக்கு உட்படுத்தல் உட்பட பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கிராமிய உற்பத்திக் குழுவின் உறுப்பினர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் விவசாயப் பயிற்சி அளிப்பதெனவும் இக் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

# வீண்வதந்திவேண்டாமென சிற்றூரவை வேண்டுகோள்

(பண்டத்தரிப்பு)

வீண் வதந்திகளைப் பரப்பி மக்களை அனாவசியப் பீதிக்கும் பதட்டத்திற்கும் உள்ளாக்க வேண்டாம்.

வேலை இல்லாது வீண் வதந்தி பரப்பும் மக்கள் தமது ஊரில் வான் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாக்க அமைக்கும் பதுங்கு குழிகள், அரண்கள் அமைக்க உதவி செய்வது நல்லது என்று பெரிய விளான் சிற்றூரவை உறுப்பினர்கள் குழுக்களாகப் பிரிந்து தமது பகுதியில் குறிச்சி, குறிச்சியாகச் சென்று வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அத்தோடு இவர்கள் இளைஞர் யுவதிகட்கும் முதலுதவிப் பயிற்சிகளும் அளிக்கின்றனர். போர்க்கால உணவு நடவடிக்கைகளையும் குறுகிய கால பயிர் நாட்டலையும் ஊக்குவிக்கின்றனர்.

# முகாமில் உணவுத் தட்டுப்பாடு

(முல்லைத்தீவு)

திருமலையில் படகு அகதிகள் செம்மலைக்கு வந்தடையும் நேரகாலம் தெரியாததால் அவர்களுக்கு உணவு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாம்.

இதேவேளைபெருந்தொகையான அகதிகள் கரையை அடையும்போது முதலில் வந்த அகதிகள் கையிருப்பில் உள்ள அரிசியை சமைத்து அகதிகளுக்குப் பங்கிடுவதால் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படுகின்றது.

சில சமயங்களில் இரவுச் சாப்பாட்டுக்கு ஒருபிடி சோறு கூடக் கிடைப்பதில்லை என அங்கிருந்து வந்தவர்கள் கூறுகின்றனர். (58)

# வள்ளங்கள் மூலம் தீவுப்பகுதிக்கு உணவு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதி மக்களுக்கும் வள்ளங்கள் மூலம் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

நெடுந்தீவு ,நயினாதீவு, எழுவைதீவு போன்ற தீவுப் பகுதி மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களாகக் கருதப்படவில்லை ஆயினும் தீவுப்பகுதிக்கான போக்குவரத்து சீரில்லாமையாலும், அப்பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடாக இருப்பதனாலும் தீவுப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த உணவுப் பொருட்களை அப்பகுதிகளுக்கு எடுத்துச் சென்று வழங்கும் வேலைகளை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடாத்தி வருகிறது. (ம)

# சம்பளம் வழங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சகல ஊழியர்களுக்கும் கடந்த மாத (ஜூன்) சம்பளக் கொடுப்பனவை வழங்குவதோடு, தற்காலிகமாக இடம்பெயர்ந்து தொழில் நடாத்தும் ஸ்தாபனங்களில்ஊழியர்களுக்குவேலை வழங்குமாறு யாழ். வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் இ. சுப்பையா வேண்டுகோள் விடுத்துள்ளார்

கிளிநொச்சி மாவட்ட

# உணவுப் பொருள் நிலை இன்று முக்கிய மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள் பற்றியும், உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டை எவ்வாறு நீக்குவது என்பது சம்பந்தமாகவும் கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்க பணிமனையில் நடைபெறுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், மற்றும் கிளிநொச்சி, பளை, பூநகரி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இக் கூட்டத்தில் முக்கியமாக இம்மாவட்டத்திலுள்ள உணவு பற்றாக்குறை, மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றை எவ்வாறு போக்குவது என்பது சம்பந்தமாக ஆராயப்படும். (49)

# திருமலை அகதிகளின் முன்மாதிரி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சமநல சேவைகள் நிலையத்தில் அமைந்திருக்கும் முகாமில் தங்கியுள்ள திருமலை அகதிகள் ஊருக்குள் நாளாந்த வேலைக்குச் சென்று வருகிறார்கள்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு இதுஒரு முன்மாதிரி நடவடிக்கையாக இருப்பதுடன் தங்களுக்கு உகந்த தொழில் வசதிகள் செய்து தந்தால் தாம் செய்ய தயாராக இருப்பதாக விருப்பமும் தெரிவித்துள்ளனர். (58)

இலங்கைத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களாக இனிவருவோரை இப் புதிய முகாம்களில் தங்க வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் தொடரும் வன்முறை காரணமாக இலங்கையில் இருந்து இந்தியா வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் அவர்களுக்கு தங்கும் வசதி செய்து கொடுப்பது தொடர்பாக முதல்வர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற உயரதிகாரிகளின் கூட்டத்திலே அகதிகள் முகாம்களுக்குப் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

# 9 படையினர் மரணம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் கடந்த இருபத்துநான்கு மணிநேரத்தில் ஒன்பது படையினர் மரணமானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# மாட்டுவண்டி மீது ஷெல் தாக்குதல்

(வேலணை)

ஊர்காவற்றுறையில் ...

முதலில் மாட்டுவண்டியின் பின்புறம் ஷெல் வீழ்ந்த ...

உணவு விநியோகம் சீரில்லை ...

இவ் அகதி ...

யான அகதிகள் கரையை அடையும்போது முதலில் வந்த அகதிகள் கையிருப்பில் உள்ள அரிசியை சமைத்து அகதிகளுக்குப் பங்கிடுவதால் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படுகின்றது.

சில சமயங்களில் இரவுச் சாப்பாட்டுக்கு ஒருபிடி சோறு கூடக் கிடைப்பதில்லை என அங்கிருந்து வந்தவர்கள் கூறுகின்றனர். (58)

எழுவைதீவு போன்ற தீவுப் பகுதி மக்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களாகக் கருதப்படவில்லை ஆயினும் தீவுப்பகுதிக்கான போக்குவரத்து சீரில்லாமையாலும், அப்பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடாக இருப்பதனாலும் தீவுப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய உணவுப்

## மாட்டுவண்டி மீது ஷெல் தாக்குதல்

(வேலணை)

ஊர்காவற்றுறையில் இருந்து அரிசி மூடைகளை கொண்டு சென்ற மாட்டுவண்டில் மீது காரைநகர் கடற்படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

ஊர்காவற்துறை ஆஸ்பத்திரிக்கு முன்பாக இந்த மாட்டுவண்டில் சென்றுகொண்டிருந்த போது இச் சம்பவம் இடம் பெற்றது.

முதலில் மாட்டுவண்டிலின் பின்புறம் ஷெல் விழுந்து வெடித்தது. இரண்டாவது ஷெல் முன்புறம் விழுந்து வெடித்ததால் வண்டில் மாடு இறந்தது.

வண்டில் சாரதி மயிரிழையில் தப்பிவிட்டார். அரிசி மூடைகளை மண்மூடைகள் என்று எண்ணி இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாம்.

யாழ். மாநகரசபை

## தீயணைக்கும்படைப்பிரிவில் ஊழியர் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபை தீயணைக்கும் படையில் இருந்த ஆறு ஊழியர்கள் கொழும்பு கதிரேசன் கோயிலில் தஞ்சமடைந்துள்ளதால் யாழ்ப்பாண தீயணைக்கும் படையில் ஆறு ஊழியர்கள் பற்றாக்குறை நிலவி வருகிறது.

மேலதிக பயிற்சி நெறிக்காக யாழ். மாநகரசபை தீயணைக்கும் படைப்பிரிவில் இருந்து ஆறு ஊழியர்கள் கொழும்புக்கு சென்றிருந்தனர். இவர்கள் அங்கு இருந்த சமயம் வட கிழக்கில் யுத்தம் ஆரம்பித்து விட்டமையால் அங்கேயே நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஒதுங்குவதற்கு இடம் இல்லாத நிலையில் இந்த ஆறு ஊழியர்களும் பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந் நிலையில் தற்போது மேலும் ஆறு ஊழியர்களே சேவையில் உள்ளனர். இந்த ஆறு பேருமே கடந்த காலக் குண்டு வீச்சு காரணமாக நகரில் ஏற்பட்ட தீயை அணைக்கப் போராடினர். இருந்தும்மேலும் தொடர்ந்து குண்டு வீச்சுக்கள் பரவலாக ஏற்படுமிடத்து தீயைக் கட்டுப்படுத்த ஊழியர்கள் பற்றாக்குறை நிலவும் என அங்குள்ள சக ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## வங்கி இயங்காததால் ஆசிரியர் சம்பளம் வழங்க முடியவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களது சம்பளத்தை வழங்குவதற்குரிய வேலைகள் முடிவுற்ற போதிலும் முல்லைத்தீவு இலங்கை வங்கி, மாங்குளம் மக்கள் வங்கி, மாங்குளம் இலங்கை வங்கி என்பன கடந்தகால இராணுவ தாக்குதல்களால் இயங்காது மூடப்பட்டுள்ளதால் சம்பளங்களை வழங்க முடியாதுள்ளதாக தெரியவருகிறது. மிகவும் நெருக்கடியான நிலையிலும் ஆசிரியர்களது சம்பளங்களை வழங்க கல்வித் திணைக்கள சம்பளகிளை உரிய நடவடிக்கையை துரித கதியில் எடுத்தும் உரிய நேரத்தில் வழங்க முடியாதுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கம் நடாத்தி வருகிறது. (ம)

## சம்பளம் வழங்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சகல ஊழியர்களுக்கும் கடந்த மாத (ஜூன்) சம்பளக் கொடுப்பனவை வழங்குவதோடு, தற்காலிகமாக இடம்பெயர்ந்து தொழில் நடாத்தும் ஸ்தாபனங்களில்ஊழியர்களுக்குவேலை வழங்குமாறு யாழ். வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் இ. சுப்பையா வேண்டுகோள் விடுத்துள்ளார்

## ஆஸ்பத்திரி இடம்மாற்றம்

(கொழும்புத்துறை)

யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்துக்கு அருகில் அரசினர் மத்திய மருந்தகம் கடந்த வாரம் முதல் இயங்கி வருகின்றது.

குருநகரில் இயங்கி வந்த இந்த அரசினர் மத்திய மருந்தகம் தற்காலிகமாக கொழும்புத்துறை வீதியில் தினசரி காலை 8-30 மணி தொடக்கம் செயல்பட்டு வருவதாக இவ்வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி திரு. த. தங்கநாதன்தெரிவித்துள்ளார் (24)

### சங்கக்கடை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவாசகர் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள தபால் நிலையம் பூட்டப்பட்டுள்ளதால் இம்முறை ப.நோ.கூ. சங்கம் மூலம் இப்பணம் வழங்கப்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் (49)

### 50க்கு மேற்பட்ட

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுள்நுழைந்ததிருடர்பெறுமதி வாய்ந்த மற்றும் பொருட்கள் இ[illegible]க்கக் கூடியதாக நகைகள் ம[illegible]த்து வைக்கப்பட்டிருந்த [illegible]தைச் சுழுவாகக்கண்டு நகைகளைத் திருடிச் சென்று[illegible]ள்ளனர்.

நகைகளுடன் திறீயின்வண்கெசற் றெக்கோடர் ஒன்றும் திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

### பதுக்கி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டில் நிலவும் அவசர கால நிலைமையைப் பயன்படுத்தி வர்த்தகர்கள்அத்தியாவசியப்பொருட்களைப்பதுக்கி வைத்து அதிக விலையில் விற்பதை விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிப் பிரதேசக் காரியாலயங்களில் பொதுமக்கள் புகார் செய்யலாம் என்று அறிவித்திருப்பதுதெரிந்ததே.(21)

## இன்று முக்கிய மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கையிருப்பில் உள்ள உணவுப் பொருட்கள் பற்றியும், உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டை எவ்வாறு நீக்குவது என்பது சம்பந்தமாகவும் கூட்டம் ஒன்று இன்று திங்கட்கிழமை காலை பூநகரி பலநோக்கு கூட்டுறவு சங்க பணிமனையில் நடைபெறுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளர் திரு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், மற்றும் கிளிநொச்சி, பளை, பூநகரி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

இக் கூட்டத்தில் முக்கியமாக இம்மாவட்டத்திலுள்ள உணவு பற்றாக்குறை, மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு ஆகியவற்றை எவ்வாறு போக்குவது என்பது சம்பந்தமாக ஆராயப்படும். (49(

## உணவு விநியோகம் சீரில்லை; அகதிகள் அவலம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த அகதிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உலர் உணவுப் பொருட்கள் வேளா, வேளைக்கு வழங்கப்படாததினால் முகாம்களில் அகதிகள் பட்டினி கிடக்கின்றனர்.

ஸ்ரீலங்கா அரச படைகளில் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த அகதிகளுக்கு முதல் ஒரு வாரத்திற்குப் போதுமான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதென்றும் அதன் பின்னர் வாராவாரம் இதே போன்று தொடர்ந்து வழங்குவதென்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது. இதன் படி தற்போது முதல் வார உணவுப் பொருட்கள் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல இடம் பெயர்ந்த அகதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஆனால் சில பகுதி முகாம் அகதிகளுக்கு இன்னமும் முதல் வாரத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை.

அதேவேளை சில அகதி முகாம்களிற்கு இம் முதல் வாரத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு ஒரு வாரம் முடிந்து பல நாட்களுமாகிவிட்டன. இவர்களுக்கு இன்னமும் இரண்டாம் வாரத்திற்கான அரசாங்கத்தின் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

அரசின் உலர் உணவுப் பொருட்களைத் தவிர்ந்த மேலதிகமாகத் தேவைப்படும் உணவுப் பொருட்களையே வழங்கும்படி தொண்டர் ஸ்தாபனங்களை ஒழுங்குபடுத்திப் பணிக்கப்பட்டிருப்பதனால் இவ்வகதிகள் தொண்டர் ஸ்தாபனங்கள் மூலம் இவ்வுணவுப் பொருட்களைப் பெற முடியாமல் உணவுப் பொருட்கள் யாவும் முடிந்த நிலையில் பல முகாம்களிலும் அகதிகள் பட்டினி கிடக்கின்றனர். அரசாங்கத்தின் இத்தாமதங்களினால் முகாம்களிலுள்ள அகதிகள் சரியான வேளைக்கு உணவின்றிக் கஷ்டப்படுகின்றனர். (ம)

### வீடு உடைத்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி வீட்டிற்கு அயலில் உள்ள வீடுகளும் உடைக்கப்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தை நியாயபடுத்த அந்தந்த வீட்டுக்காரர்கள் இடம் பெயர்ந்து சென்றிருப்பதால் முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

### திருடர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருவரையும் சில இளைஞர்கள் மடக்கிப் பிடித்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

''நாமே சம்மாட்டி தர்மன் வீட்டில் எவர்சில்வர் பொருட்களைத் திருடியவர்கள்.''

இவ்வாறு இருவரும்சொல்ல ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட இரு திருடரும் கோட்டைப்பகுதியில் வேலை செய்ய பிற்பாடு அனுப்பி வைக்கப்பட்டனரென்று தெரிய வருகிறது. (21

## சான்றிதழ்

(கொழும்புத்துறை)

மீண்டும் இந்த ஆண்டுமுதல் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நடைமுறை அமுல் செய்யப்பட உள்ளது.

கடந்த சில வருடங்களாக இத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### மூதூரில்

களை சிறிலங்கா படையினர் காட்டு மிராண்டித் தனமாக வெட்டி கொன்றுள்ளனர்.

இவர்கள் பற்றிய விபரம் எதுவும் இன்னும் செய்திக்கு எட்டவில்லை. (லோ)

## திருமலை அகதிகளின் முன்மாதிரி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு சமநல சேவைகள் நிலையத்தில் அமைந்திருக்கும் முகாமில் தங்கியுள்ள திருமலை அகதிகள் ஊருக்குள் நாளாந்த வேலைக்குச் சென்று வருகிறார்கள்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு இதுஒரு முன்மாதிரி நடவடிக்கையாக இருப்பதுடன் தங்களுக்கு உகந்த தொழில் வசதிகள் செய்து தந்தால் தாம் செய்ய தயாராக இருப்பதாக விருப்பமும் தெரிவித்துள்ளனர். (58)

### மட்டக்களப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைத் தான் சந்தித்ததாகவும் அவர்களிடம் மக்களே தன்னை அழைத்துச் சென்றதாகவும் நிருபர் தெரிவித்துள்ளார்.

மேலும் தான் விடுதலைப் புலிகளைச் சந்தித்து உரையாடியபோது தமக்கு ஆயுதங்களும், உணவும்தம்மிடம் இருப்பதாகவும், அவை தமக்குத் தேவையில்லை என்றும், அத்தோடு இவற்றிற் கெல்லாம் மேலாக மக்கள்ஆதரவு தமக்கு உண்டென்றும் கூறியதாகவும் தெரிவித்தார்.

மட்டக்க்களப்புப் பயணத்தைப் பற்றிக்கருத்துத் தெரிவித்தசெய்தியாளர் அங்குமக்கள் எல்லோரும் விடுதலைப்புலிகளே ஆனால்ஒருசிலரே ஆயுதம் வைத்துள்ளார்கள் எனத் தெரிவித்ததாகவும் வெரித்தாஸ்வானொலி அறிவித்தது.

### மண்ணையும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரவைத் தலைவர் செ. இராஜேந்திரம் தலைமை தாங்கினார். இக் கூட்டத்தில் பல நூற்றுக்கணக்கான மக்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு தங்கும் வசதி செய்து கொடுப்பது தொடர்பாக முதல்வர் மு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற உயரதிகாரிகளின் கூட்டத்திலே அகதிகள் முகாம்களுக்குப் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு செய்வது என முடிவு செய்யப்பட்டது.

## 9 படையினர் மரணம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் கடந்த இருபத்துநான்கு மணிநேரத்தில் ஒன்பது படையினர் மரணமானதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

### சில அகதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

ஆனால் சில உதவி அரசாங்க அதிபர்களும், கிராம சேவகர்களும் தமது பகுதியில் உள்ள அகதி முகாம்களுக்கு இதுவரை தனிப்பட்ட நேரடி விஜயம் செய்யவில்லை என்றும் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் செய்வதில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இதனால் இந்த அகதிகளுக்கு அரசாங்கம்வழங்கும்உலர் உணவுப் பொருட்களோ, தொண்டர் ஸ்தாபனங்களின் உதவிகளோ கிடைக்காமல் போகிறது. இதனால் இந்த அகதிகள் மிகவும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். (ம)

### பல்கலைக்கழக

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிக்க புடைவைக்கட்டு, திருமலைப்பகுதிக்கும் சென்றுவந்துள்ளனர்.

இவர்கள் பொதுமக்களிடம் இருந்து பூரண ஒத்துழைப்பையும் உதவிகளையும் எதிர்பார்க்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்த திருமலை இடம் பெயர்ந்தோர் ஐந்து பேர்களுக்குகுழந்தைப்பேற்று மருத்துவம்செய்துள்ளார்கள்.

யாழ். பல்கலைக்கழக
அனைத்து மாணவர்களுக்குமான
போர்க்கால

## விஷேட பொதுக் கூட்டம்

இடம்: கைலாசபதி கலையரங்கம்
காலம்: 10 - 07 - 1990
நேரம்: முற்பகல் 10-மணி

குறிப்பு: இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டு இன்றைய நிலைபற்றிய கருத்துக்களை வழங்கவுள்ளதால் யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்